**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,</u>**

**<u>கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

அசல் வழக்கு எண்.50/2013 நாள்: 14.12.2020

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.நாகேஷ் (பொறுப்பு), பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | : ரமேஷ் | |
| தந்தை பெயர் | | : அண்ணாமலை | |
| கிராமம் | : | தாலுக்கா | : |
| வயது | : | வேலை | : |

**<u>4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து வேண்டுமென்று கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் என்ன சர்வே எண் சொத்து தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.21/2ஏ ஆகும். நான் இந்த ஒரு சர்வே எண் பொறுத்துமட்டும்தான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்குள் வேறு சில சர்வே எண்களை பொறுத்தும் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கில் சொல்லியுள்ள சர்வே எண் சொத்துக்களை தவிர்த்து எனக்கு வேறு ஏதாவது சொத்துக்கள் எனக்கோ எனது குடும்பத்திற்கோ உண்டா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கள் முழுவதும் எனது தாத்தா சம்பாதித்த பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தாத்தா 4-ஆம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்துக்களை கிரையம் கொடுத்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ள சமயத்தில் எனக்கு என்ன வயதிருக்கும் என்றால் 25 வயது ஆகும். எனக்கு தற்போது என்ன வயது என்றால் 31 வயது ஆகும். என்னுடைய வழக்கில் 3-ஆம் பிரதிவாதி என்ன உறவு என்றால் எனது தந்தையாவர். எனது தாத்தா படவத்தி (எ)ராமசாமி எப்போது இறந்தார் என்றால் 26.05.1995-ல் இறந்துவிட்டார். எனது தாத்தா இறந்தபோது எனக்கு என்ன வயது இருந்தது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. எனது தந்தை 4-ஆம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை எந்த ஆண்டு 4-ஆம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் நானும், 1, 2 பிரதிவாதிகளும் தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து விவசாயம் செய்துவந்தோம் என்று சொல்லியுள்ளதை நிரூபிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளோம் என்றால் எனது தாயார்தான் அதை ஓட்டிவந்தார், பின்னர் எனது

தந்தையுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு எங்களை அழைத்துக்கொண்டு எனது தாத்தா வீட்டிற்கு வந்துவிட்டார். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதி தவறா என்றால் நாங்கள் அச்சொத்தில் அனுபவித்து வந்தோம். நான் சொல்வதுபோல வழக்கு சொத்தில் நாங்கள் எப்போதும் அனுபவித்தில் இருந்துவரவில்லை என்றாலும், வழக்கிற்காக வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை 4-ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தது செல்லாது என எனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள சங்கதி எனக்கு எப்போது தெரியும் என்றால் 2008 ஆம் ஆண்டு தெரியும். நான் அப்போதே நடவடிக்கையை துவக்கினேனா என்றால் இல்லை. நான் 1, 2 பிரதிவாதிகளிடம் மட்டுமே பரிகாரம் கோர உரிமைபடைத்தவர் என்றாலும், 4, 5 பிரதிவாதிகளிடம் பரிகாரம் கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**